டிஜிட்டல் டெய்லி
Kaalaimani.com
காலைமணி.காம்
12.8.2023 சனிக்கிழமை • மதுரை • பக்கங்கள் 23 • Online Edition • www.kaalaimani.com

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில்

# ரூ.14.90 கோடி மதிப்பீட்டில் 100 புதுப்பிக்கப்பட்ட பேருந்துகள்

## முதல்வர் ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்

சென்னை, ஆக.11

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் 14 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட 100 பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இது குறித்து தமிழக அரசு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாட்டில் உள்ள ஏழை எளிய மற்றும் நடுத்தா மக்களுக்கு இன்றியமையாத போக்குவரத்துச் சேவைகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் வாயிலாக குறைந்த கட்டணத்தில் அரசு வழங்கி வருவதோடு, அனைத்து கிராமப் பகுதிகளுக்கும் பேருந்து பயண வசதியை ஏற்படுத்தி மாநிலம் முழுவதும் தடையற்ற போக்குவரத்து சேவையை அளித்து வருகிறது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவ, மாணவியர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு இலவச பேருந்து பயணச் சலுகை, சாதாரண நகர கட்டண பேருந்து களில் மகளிர் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்வதற்காக

மகளிர் கட்டணமில்லா பயணம் திட்டம், பொதுமக்களின் தேவைக்கேற்ப புதிய பேருந்து வழித்தடங்களை தொடங்கி வைத்தல், பழைய பேருந்துகளை புதுப்பித்தல், புதிய பேருந்து களை கொள்முதல் செய்தல், பேருந்து பணிமனைகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு



அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. தமிழக முதல்வர் 19.10.2022 அன்று சட்டப்பேரவையில் 110-விதியின் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், பொதுமக்களின் பேருந்து பயன் பாடு அதிகமான நிலையில், போக்குவரத்துக் கழகங்களை மேம் படுத்திட பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருவதாகவும், 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய் யப்படும் என்றும், அடிச்சட்டம் (ரோ) நல்ல நிலையில் உள்ள 1000 பழைய பேருந்துகள் புதுப்பிக்கப்படும் என்றும் அறிவித்தார்.

அந்த அறிவிப்பின்டி, பொதுமக்களின் போக்குவரத்து தேவை களை பூர்த்தி செய்கின்ற வகையிலும், அரசுப் போக்குவரத்து கழகங்களின் பேருந்துகளை மேம்படுத்திடும் வகையிலும், அடிச் சட்டம் நல்ல நிலையிலுள்ள 1000 பழைய பேருந்துகளை 152.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பித்திட நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகிறது. அதன் முதற்கட்டமாக, விழுப்புரம் அரசு போக் குவரத்துக் கழகத்திற்கு 16 பேருந்துகளும், சேலம் அரசு போக்கு வரத்துக் கழகத்திற்கு 15 பேருந்துகளும், கும்பகோணம் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 37 பேருந்துகளும், திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 32 பேருந்துகளும், என மொத்தம் 1000 பேருந்துகள் 14 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக முதல்வர் இன்றைய தினம் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பணீந்திர ரெட்டி, போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்கு நர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

kaalaimani.com in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Phone: 4366425.

# விலையை கட்டுப்படுத்த 3 லட்சம் மெட்ரிக் டன் வெங்காய இருப்பை விடுவிக்கிறது மத்திய அரசு

புது தில்லி, ஆக.11

இந்த ஆண்டு உள்ள 3 லட்சம் மெட்ரிக் டன் வெங்காய கையிருப்பை விடுவிக்க மத்திய நுகர்வோர் விவகாரத் துறை முடிவு செய்துள்ளது. இத்துறையின் செயலாளர் திரு. ரோஹித் குமார் சிங் 10.08.2023 அன்று தேசிய வேளாண் கூட்டமைப்பு (நாஃபெட்) மற்றும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு (என்.சி.சி.எஃப்) அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து இதற்கான வழிமுறைகளை இறுதி செய்தார்.



வெங்காயத்தின் சில்லறை விலை அகில இந்திய சராசரியை விட அதிகமாக இருக்கும் மாநிலங்களில் உள்ள முக்கிய சந்தைகளில் வெங்காய இருப்பை விடுவித்த விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இ-காமர்ஸ் தளங்களில் மின் ஏலம் மற்றும் சில்லறை விற்பனை செய்வது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது. நுகர்வோருக்கு மலிவு விலையில் வெங்காயம் கிடைக்கச் செய்யும் நோக்கில், விற்பனையின் அளவு மற்றும் வேகம் ஆகியவை, விலை மற்றும் கிடைக்கும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அளவீடு செய்யப்படும்.

நடப்பாண்டில், மொத்தம், 3 லட்சம் மெட்ரிக் டன் வெங்காயம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.தேவைப்பட்டால், இது மேலும் அதிகரிக்கப்படலாம். மகாராஷ்டிரா மற்றும் மத்தியப் பிரதேசத்திலிருந்து ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் தலா 1.50 லட்சம் மெட்ரிக் டன் வெங்காயத்தை நாஃபெட் மற்றும் என்.சி.சி.எஃப் ஆகிய இரண்டு மத்திய ஒருங்கிணைப்பு முகமைகள் கொள்முதல் செய்துள்ளன. கடந்த 4 ஆண்டுகளில் வெங்காய கையிருப்பு அளவு மும்மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. 2020-21 ஆம் ஆண்டில் 1 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 2023-24 ஆம் ஆண்டில் 3 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. நுகர்வோருக்கு மலிவு விலையில் வெங்காயம் கிடைப்பதை உறுதி செய்வதிலும், விலை ஸ்திரத்தன்மையை பராமரிப்பதிலும் வெங்காய கையிருப்பு அளவு முக்கிய பங்கு வகிக்கிறது.

காலைமணி.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# டிஜஇஏ கனெக்டர்ஸுக்கு டிடிபி-டி.ஸ்டி ரூ.3.81 கோடி நிதியுதவி செய்துள்ளது




புது தில்லி, ஆக.11

தொழில்நுட்ப மேம்பாட்டு வாரியம் இன்று பெங்களூரை தளமாகக் கொண்ட டி.ஐ.இ.ஏ கனெக்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் தொழில்நுட்ப ஸ்டார்ட்அப்கள் மூலம் உள்நாட்டு தொழில் நுட்பங்களை வணிகமயமாக்குதல் என்ற முன்முயற்சியின் கீழ் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன் மூலம் நுண் மின்னணு சுற்றுச்சூழல் இணைப்பிகள் மற்றும் முனையங்களை வணிகமயமாக்கல்' திட்டத்திற்கு மொத்தத் திட்ட மதிப்பீடான ரூ.8.19 கோடியில் ரூ.3.81 கோடியை வழங்க வாரியம் உறுதியளித்துள்ளது.

உள்நாட்டுத் தொழில்நுட்பங்களின் மேம்பாட்டை ஆதரித்தல், தொழில்முயற்சி மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவித்தல் ஆகிய வற்றை இலக்காகக் கொண்டு 'தொழில்நுட்ப ஸ்டார்ட் அப்கள் மூலம் உள்நாட்டுத் தொழில்நுட்பங்களின் வணிகமயமாக்கல்' என்ற முன்முயற்சியை தொழில்நுட்ப மேம்பாட்டு வாரியம் தொடங் கியது. இத்தகைய ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கு நிதியளிப்பதன் மூலம், டி.டி.பி அவற்றின் அடித்தள தீர்வுகளை விரிவுபடுத்துவதற்கு அவர் களுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள் ளது, இது பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதோடு, தொழில்நுட்ப முன்னேற்றங்களில் நமது நாட்டின் தலைமையை மேம்படுத்தும்.

இது குறித்து, டி.டி.பி செயலாளர், ராஜேஷ் குமார் பதக் கூறுகையில், மின்சார வாகனங்கள் மற்றும் ட்ரோன்கள் மீதான நிறுவனத்தின் கவனம், நிலையான போக்குவரத்து தீர்வுகளை நோக்கிய உலகளாவிய போக்குடன் ஒத்துப்போகிறது. புதுமையான இணைப்புகள் மற்றும் முனையங்களை உருவாக்குவதன் மூலம், நிறுவனம் முக்கிய சந்தையின் வளர்ச்சிக்கு பங்களிப்பது மட்டு மின்றி, இறக்குமதி செய்யப்பட்ட பாகங்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்கிறது. கூடுதலாக, விண்வெளி மற்றும் பாதுகாப்பில் அவர்களின் ஈடுபாடு முக்கியமான தொழில்களுக்கு நம்பகமான மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பத்தை வழங்குவதற்கான அவர்களின் உறுதிப்பாட்டை நிரூபிக்கிறது என்றார்.

# தமிழகத்தில் இறால் குஞ்சு பொரிப்பு தொழிலில் 6 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு

சென்னை, ஆக.11

தமிழகத்தில் இறால் குஞ்சு பொரிக்கும் தொழிலால், அடுத்த நான்கு ஆண்டுகளில், 6 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும், என, தமிழ்நாடு அகில இந்திய இறால் மீன் வளர்ப்பு சங்க தலைவர் கால்ராஜ் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய சட்டம் என்ற சிஏஏ-வில் சில திருத்தங்கள் பார்லிமென்டில் நிறைவேற்றியுள்ளது. இதன் வாயிலாக சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. இதனால், இந்திய இறால் மீன் வளர்ப்பு தொழிலுக்கு உத்வேகம் கிடைத்துள்ளது.

தமிழகத்தில், 61,776 ஏக்கர் பரப்பளவில், 85 இறால் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. ஆனால், 17,297 ஏக்கர் பரப்பளவு மட்டுமே பயன்படுத்தப்பட்டு, 31.76 கோடி கிலோ மட்டுமே உற்பத்தி செய்கின்றனர். மேலும், இந்த நிலத்தை முழுமை யாக பயன்படுத்தினால், 90.71 கோடி கிலோ வரை உற்பத்தி அதிகரிக்கும். இதன் வாயிலாக, அன்னிய செலாவணி பங்களிப்பு, 40,000 கோடி ரூபாயிலிருந்து, 1 லட்சம் கோடி ரூபாயாக அதிகரிக்கும்.

மேலும், 6 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்புள்ளது. இந்த திருத்த மசோதாவை மேற்கொள்ள உதவியாக இருந்த, மத்திய, மாநில அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# பாரதீப் துறைமுக ஆணையம் 50 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளைக் கையாளும் பெரிய துறைமுகமாக உள்ளது

புது தில்லி, ஆக.11

பாரதீப் துறைமுகம் ஆகஸ்ட் 8, 2023 அன்று 50.16 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளை ஏற்றுமதி செய்து சாதனை படைத்ததன் மூலம் ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியது. இது முந்தைய நிதி யாண்டின் இதே காலத்தை விட 6.5% வளர்ச்சியைக் எட்டியுள்ளது. கடந்த ஆண்டில் 140 நாட்களிலும் இந்த சாதனையை நடப்பு நிதியாண்டில் 129 நாட்களில் துறைமுகம் எட்டியுள்ளது. கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்தில் கையாளப்பட்ட 812 கப்பல் களுடன் ஒப்பிடுகையில் பாரதீப் துறைமுகம் 942 கப்பல்களைக் கையாண்டுள்ளது.மேற்குறிப்பிட்ட சாதனைக்காக, பாரதீப் துறை முகத் தின் தலைவர் பி.எல்.ஹரநாத், மத்திய துறைமுக கப்பல் மற்றும் நீர்வழிகள் அமைச்சர் சர்பானந்தா சோனோவாலுக்கு தனது நன்றியைத் தெரிவித்துள்ளார். துறைமுகத்தின் திறன் மீது தொடர்ந்து நம்பிக்கை வைத்திருக்கும் அனைத்து அதிகாரிகள்/ ஊழியர்கள், பயனர் தொழிற்சாலைகள், ஸ்டீவ்டோர்ஸ், நீராவி முக வர்கள், தொழிற்சங்கங்கள், பிபிபி ஆபரேட்டர்கள் ஆகியோருக்கும் ஹரநாத் வாழ்த்து தெரிவித்தார்.



# போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு உறுதிமொழி முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஏற்கப்பட்டது

சென்னை, ஆக.11

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் காவல்துறை சார்பில் நடைபெற்ற போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு நிகழ்ச்சியில், நாட்டு நலப் பணி திட்ட மாணவர்கள், தேசிய மாணவர் படை, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் போதைப் பொருட்கள் ஒழிப்பு குறித்த உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். மேலும், காணொலிக் காட்சி வாயிலாக தமிழ்நாடு முழுவதிலிருந்தும் கலந்து கொண்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களால் இந்த உறுதிமொழி ஏற்கப்பட்டது. போதைப் பொருட்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்திடவும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் போதைப் பொருட்கள் தடுப்பு விழிப்புணர்வு பிரச்சாரங்களை அதிகப்படுத்திடவும், போதைப் பொருட்கள் எந்த வடிவில் வந்தாலும் அதை அடியோடு ஒழிக்க தீவிரமாக நடவடிக்கை மேற்கொள்ளவும் முதல்வர் காவல்துறைக்கு உத்தரவிட்டார்.

அதன் அடிப்படையில் போதை ஒழிப்பு தொடர்பான தொடர்ச்சி யான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு காவல்துறை சார்பில் 11.08.2022 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு தொடக்க விழாவில் முதல்வர் தலைமையில் நாட்டு நலப் பணி திட்ட மாணவர்கள், தேசிய மாணவர் படை, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் போதைப் பொருட்கள் ஒழிப்பு குறித்த உறுதிமொழியை ஏற்கப்பட்டது. மேலும், போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஆகிய வற்றை இணைத்து புதிதாக உருவாக்கப்பட்டுள்ள அமலாக்கப் பணியகம் – குற்றப் புலனாய்வு துறை என்ற புதிய பிரிவை முதல்வர் தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு விழாவில், நாட்டு நலப் பணி திட்ட மாணவர்கள், தேசிய மாணவர் படை, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் போதைப் பொருட்கள் ஒழிப்பு கூறித்த உறுதிமொழி முதல்வர் தலைமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**உறுதிமொழி:** போதைப் பழக்கத்தால் எற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும் எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து

அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற் குள்ளானவர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன்.

போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகிய வற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணைநிற் பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன். அதனைத் தொடர்ந்து அமலாக்கப் குற்றப்புலனாய்வு துறையினால் தயாரிக்கப்பட்டுள்ள போதைப் பொருட்கள் ஒழிப்பு சூறித்த விழிப்புணர்வு பிரச்சார குறும்படத்தை வெளியிட்டார். போதைப் பொருட்களால் ஏற்படும் தீமைகளை விளக்கிடும் இவ்விழிப்புணர்வு குறும்படம் தமிழ்நாடு முழுவதும் உள்ள திரையரங்குகளில் திரையிடப்படும். மேலும், போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு மாணவர்களை எளிதாக சென்றடைய அவர்களை கவரும் வகையில் பாடல் காணொலியும் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் பல்வேறு வழக்குகளில் காவல் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்ட மார் 13,000 கிலோ கஞ்சா மற்றும் போதைப் பொருட்கள் அனைத்து வழிமுறைகளை யும் பின்பற்றி இன்று அழிக்கப்பட்டது. போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு உருவாக்கிடும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மாநிலத்தில் உள்ள அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் சுமார் 20,000க்கும் மேற்பட்ட போதைக்கு எதிரான மாணவர் குழுக்களும், நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள், தேசிய மாணவர் படை மற்றும் இதர மாணவர்கள் இயக்கங்களின் மூலம் போதைப் பொருட் களுக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரத்தினை தொடர்ச்சியாக மேற்கொள்ள சிறப்பு தன்னார்வலர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருட்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட துரித நடவடிக் கைகளின் காரணமாக 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் 22,447 குற்றவாளிகளுக்கு எதிராக 16,023 வழக்குகள் பதியப்பட்டு 42,337 கிலோ கஞ்சா, 1.234 கிலோ ஹெராயின், 74,412 போதை மாத்திரைகள் மற்றும் 223 கிலோ பிற போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும், போதைப் பொருள் தடுப்பு சட்டப்பிரிவு வடிக்குகளில், குற்றவாளிகள் மற்றும் அவரது குடும்பத்தினரின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டு, அவர்களின் பெயரிலுள்ள சொத்துக்களை கையகப்படுத்தும் தொடர் முயற்சி களும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை சுமார் ரூ.18.15 கோடி மதிப்புள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

# 21 புதிய பசுமை விமான நிலையங்களை அமைக்க மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புதல்

புது தில்லி, ஆக.11

விமான நிலையங்களில் உள்கட்டமைப்புகள் / வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட விமான நிலையங்களின் விரிவாக்கம் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும், இது செயல்பாட்டு தேவைகள், போக்குவரத்து, தேவை, வணிக சாத்தியக்கூறுகள் போன்றவற்றைப் பொறுத்து இந்திய விமான நிலைய ஆணையம் மூலதன செலவின அல்லது சம்பந்தப்பட்ட விமான நிலைய செயல்பாட்டாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது. 2019-24 ஆம் ஆண்டில் பல்வேறு பிரவுன்ஃபீல்ட் விமான நிலையங்களை மேம்படுத்துதல் / மேம்படுத்துதல் / நவீனமயமாக்குதல் மற்றும் வளர்ந்து வரும் தேவைகளை பூர்த்தி செய்ய பசுமை விமான நிலையங்களை மேம்படுத்துதல் உள்ளிட்ட ரூ.98,000 கோடிக்கு மேல் கேபெக்ஸ் திட்டத்தை இந்திய விமான நிலைய ஆணையம் மற்றும் பிற விமான நிலைய செயல்பாட்டாளர்கள் தொடங்கியுள்ளனர்.

அந்தமான் நிகோபார் தீவுகளில் உள்ள போர்ட் பிளேர், ஆந்திராவில் விஜயவாடா மற்றும் திருப்பதி, அருணாச்சல பிரதேசத்தில் இட்டாநகர் மற்றும் தேஜ், அசாமின் திப்ருகர், பீகாரில் தர்பங்கா மற்றும் பாட்னா, டெல்லியில் சப்தர்ஜங், கோவா, குஜராத்தில் தோலேரா, ராஜ்கோட், சூரத் மற்றும் வதோதரா, லடாக்கில் லே, கர்நாடகாவின் கலபுரகி, கேரளாவின் கோழிக்கோடு, போபால் ஆகிய இடங்களில் விமான நிலைய மேம்பாடு மற்றும் விரிவாக்கத்தை இந்திய விமான நிலைய ஆணையம் மேற்கொண்டுள்ளது. மத்திய பிரதேசத்தில் குவாலியர், இந்தூர், ஜபல்பூர் மற்றும் ரேவா, மகாராஷ்டிராவில் ஜுஹு, கோலாப்பூர் மற்றும் புனே, மணிப்பூரில் இம்பால், ஒடிசாவின் புவனேஸ்வர், ராஜஸ்தானின் ஜோத்பூர், தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் தூத்துக்குடி, திரிபுராவில் அகர்தலா, உத்தரபிரதேசத்தில் அயோத்தி, கோரக்பூர், கான்பூர், முயர்பூர் மற்றும் சஹரன்பூர், உத்தரகண்டில் டேராடூன் மற்றும் மேற்கு வங்கத்தில் கொல்கத்தா. முனையக் கட்டிடங்கள், ஓடுபாதைகளை விரிவுபடுத்துதல், வலுப்படுத்துதல், வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் பிற தொடர்புடைய உள்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் மற்றும் விரிவாக்கப் பணிகளை உள்ளடக்குகின்றன.

இதுவரை, 21 புதிய பசுமை விமான நிலையங்களை அமைக்க மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றில், 12 பசுமை விமான நிலையங்கள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன. இதனை அமைச்சர் வி.கே.சிங் மக்களவையில் தெரிவித்தார்.

# டொயோட்டா ருமியன் இந்திய சந்தையில் அறிமுகம்




புது தில்லி, ஆக.11

மாருதி சுசுகி எர்டிகா மாடலை தழுவி உருவாக்கப்பட்ட டொயோட்டா ருமியன் மாடலை இந்திய சந்தையில் அறிமுகம் செய்தது டொயோட்டா நிறுவனம். புதிய டொயோட்டா ருமியன் மாடல் மூன்று வேரியன்ட்கள், ஐந்து நிற ஆப்சன்களில் கிடைக்கிறது. வரும் வாரங்களில் ருமியன் மாடலுக்கான முன்பதிவு துவங்க இருக்கிறது.

எர்டிகா மாடலை தழுவி உருவாக்கப்பட்டு இருக்கும் போதிலும், ருமியன் மாடலின் ஸ்டைலிங் காரணமாக சற்று வித்தியாசமான தோற்றம் கொண்டிருக்கிறது. அந்த வகையில் ருமியன் மாடலின் முன்புறம் வித்தியாசமான முன்புற கிரில், மெஷ் பேட்டன், ப்ரோஜெக்டர் ஹெட்லேம்ப்கள், பம்ப்பர்கள் மற்றும் அலாய் வீல்கள் ரிடிசைன் செய்யப்பட்டு உள்ளன.

இந்த மாற்றங்கள் தவிர, ருமியன் மாடல்– ஸ்பன்கி புளூ, கஃபே வைட், என்டைசிங் சில்வர், ரஸ்டிக் பிரவுன் மற்றும் ஐகானிக் கிரே என ஐந்துவிதமான வண்ணங்களில் கிடைக்கிறது. புதிய ருமியன் மாடலின் உள்புறம் ஏழு பேர் அமரும் வகையிலான இருக்கை அமைப்புகள், டூயல் டோன் பெய்க் மற்றும் பிளாக் தீம், 7 இன்ச் டச் ஸ்கிரீன் இன்போடெயின்மென்ட் சிஸ்டம், ரியர் ஏசி வென்ட்கள், ஆட்டோமேடிக் கிளைமேட் கன்ட்ரோல், ஸ்டீரிங் மவுன்ட் செய்யப்பட்ட கன்ட்ரோல்கள் வழங்கப்பட்டுள்ளன. பாதுகாப்பிற்கு டொயோட்டா எம்பிவி மாடலில் நான்கு ஏர்பேக், ஹில்–ஹோல்டு அசிஸ்ட், ஏபிஎஸ் மற்றும் இபிடி, முன்புற சீட்பெல்ட்கள் வழங்கப்பட்டு உள்ளன.

ருமியன் எம்பிவி மாடலில் கே சீரிஸ் 1.5 லிட்டர் பெட்ரோல் என்ஜின் வழங்கப்பட்டு இருக்கிறது. இத்துடன் சிஎன்ஜி வேரியன்ட் வழங்கப்படுகிறது. இந்த என்ஜின் 102 ஹெச்பி பவர், 136.8 நியூட்டன் மீட்டர் டார்க் இழுவிசையை வெளிப்படுத்தும் திறன் கொண்டுள்ளது. இத்துடன் 5 ஸ்பீடு மேனுவல், 6 ஸ்பீடு டார்க் கன்வெர்ட்டர் ஆட்டோமேடிக் டிரான்ஸ்மிசன் வழங்கப்படுகிறது. இதன் சிஎன்ஜி வேரியன்ட் 87 ஹெச்பி பவர், 121.5 நியூட்டன் மீட்டர் டார்க் இழுவிசையை வெளிப்படுத்தும் திறன் கொண்டிருக்கிறது. இத்துடன் மேனுவல் டிரான்ஸ்மிசன் வழங்கப்படுகிறது.

# பெரம்பலூரில் சிப்காட் தொழில் பூங்கா 50,000 பேருக்கு வேலைவாய்ப்பு

பெரம்பலூர், ஆக.11

பெரம்பலூர் மாவட்டம், எறையூரில் அமைய உள்ள சிப்காட் தொழில் பூங்கா வாயிலாக, 50,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும், என, பீனிக்ஸ் கோத்தாரி நிறுவன தலைவர் ஜின்னா ரபீக் அஹமது தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

சிப்காட் தொழில் பூங்காவில், பீனிக்ஸ் கோத்தாரி நிறுவனத்தின் சார்பில், காலணிகள் தயாரிக்கப்பட உள்ளன. தைவான் நாட்டு தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் கற்பகம், சட்டமன்ற உறுப்பினர் ஆகியோரை சந்தித்து பேசினர். பின், பீனிக்ஸ் கோத்தாரி நிறுவன தலைவர் தெரிவித்துள்ளதாவது:

இந்தியாவிலேயே முதல் முறையாக, பெரம்பலூரிலேயே மூலப் பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டு, காலணிகள் தயாரிக்கப்பட உள்ளன.

நைக்கி, அடிடாஸ் உள்ளிட்ட பெரும் நிறுவனங்களும் பெரம்பலூர் மாவட்டத்துக்கு வர உள்ளன. மூன்று ஆண்டுகளுக்குள் முழுமையான பணிகள் முடிக்கப்பட்டு, தொழிற் சாலை அமைய உள்ளது. மொத்தம், 5,000 கோடி ரூபாய் முதலீட்டில், 50,000 பேருக்கு வேலைவாய்ப்பை தரும் வகையில், சிப்காட் தொழில் பூங்கா அமைய உள்ளது. வேலைவாய்ப்பில், பெண்களுக்கு, 80 சதம் முன்னுரிமை அளிக்கப்படும். வரும், நவம்பர் மாதம் முதல், விற்பனையை துவக்கி வைக்க முதல்வரிடம் நேரம் கேட்டுள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# நடப்பாண்டுக்கான ரூ.1,712 கோடி ஈவுத்தொகை அரசுக்கு வழங்கியது யூனியன் வங்கி

மும்பை, ஆக.11

2022-23ம் நிதியாண்டுக்கான பங்கு ஈவுத் தொகையாக மத்திய அரசுக்கு ரூ.1,712 கோடி ரூபாயை பொதுத்துறையைச் சேர்ந்த யூனியன் வங்கி வழங்கியுள்ளதாக தகவல் வெளிவந்துள்ளது. இது குறித்து யூனியன் வங்கி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது: கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் இந்த ஆண்டு மார்ச் வரையிலான நிதியாண்டுக்கான பங்கு ஈவுத் தொகையாக, ரூ.1,712 கோடியை மத்திய அரசுக்கு வங்கி அளித்துள்ளது.

இது, மத்திய அரசுக்கு வங்கி அளித்துள்ள அதிகபட்ச ஆண்டு ஈவுத் தொகையாகும். சமீபத்தில் தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி யொன்றில் அதற்கான காசோலையை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் வங்கியின் நிர்வாக இயக்குநர் மணிமேகலை வழங்கினார் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# வாகனங்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் பணிகளில் ஓலா எலெக்ட்ரிக் நிறுவனம்



புது தில்லி, ஆக.11

ஓலா எலெக்ட்ரிக் நிறுவனம் தனது வாகனங்கள் எண்ணிக்கையை அதிகப் படுத்தும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. புதிய எலெக்ட்ரிக் ஸ்கூட்டர் மாடலுக்கான டீசரை அந்நிறுவனம் வெளியிட்டு உள்ளது. சமீபத்தில் ஓலா தனது எஸ்1 வேரியன்டை நிறுத்திய நிலையில், புதிய ஸ்கூட்டருக்கான டீசரை வெளியிட்டு இருக்கிறது. டீசரின் படி புதிய ஓலா ஸ்கூட்டர் சற்று வித்தியாசமான ஹேண்டில் பார் மற்றும் ஸ்விட்ச் கியூப்களை கொண்டிருக்கும் என்று தெரிய வந்துள்ளது. இத்துடன் வட்ட வடிவம் கொண்ட கண்ணாடிகள், புதிய ஹெட்லைட் கவுல் வழங்கப்படுகிறது. புதிய ஸ்கூட்டரில் காஸ்மடிக் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவைதவிர புதிய ஸ்கூட்டரின் ஒட்டுமொத்த டிசைன் ஒரே மாதிரியே இருக்கும் என்று தெரிகிறது. புதிய ஓலா ஸ்கூட்டரின் ஹார்டுவேர் அம்சங்கள் பற்றி இதுவரை எந்த தகவலும் இல்லை. எனினும், புதிய ஸ்கூட்டர் ஓலா எஸ்1 ஏர் மாடலின் கீழ் நிலைநிறுத்தப்படும் என்பதால், அதன் அம்சங்கள் மற்றும் ரேன்ஜ் சற்று குறைவாகவே இருக்கும் என்று தெரிகிறது. தற்போது விற்பனை செய்யப்படும் ஓலா நீ1 ஏர் மாடலில் 3 கிலோவாட் ஹவர் பேட்டரி மற்றும் 4.5 கிலோவாட் மோட்டார் வழங்கப்பட்டு இருக்கிறது. இதில் உள்ள பேட்டரியை முழுமையாக சார்ஜ் செய்தால் 125 கிலோமீட்டர்கள் வரையிலான ரேன்ஜ் வழங்குகிறது. இத்துடன் மணிக்கு அதிகபட்சம் 90 கிலோமீட்டர் வேகத்தில் செல்லும் திறன் கொண்டுள்ளது.

புதிய ஓலா எஸ்1 மாடலில் எல்இடி இலுமினேசன், டிஜிட்டல் கன்சோல், இரண்டு ரைடு மோட்கள் வழங்கப்படுகிறது. இத்துடன் முன்புறத்தில் டெலிஸ்கோபிக் ஃபோர்க்குகள், பின்புறம் இரட்டை ாக் அப்சார்பர்கள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கலாம். இத்துடன் இருபுறங்களிலும் டிரம் பிரேக்குகள் வழங்கப்படலாம். இந்திய சந்தையில் புதிய ஓலா ஸ்கூட்டர் ஆகஸ்ட் 15ம் தேதி அறிமுகம் செய்யப்பட இருக்கிறது. இதன் விலை ஏற்கனவே விற்பனை செய்யப்பட்டு வரும் ஓலா எஸ்1 ஏர் மாடலை விட குறைவாகவே நிர்ணயம் செய்யப்படும் என்று தெரிகிறது. இந்தியாவில் ஓலா எஸ்1 ஏர் மாடல் விலை ரூ. 1 லட்சத்து 09 ஆயிரத்து 999 என்று நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

# கிளாம்பாக்கத்திலிருந்து பேருந்துகளை படிப்படியாக இயக்க முடிவு

சென்னை, ஆக.11

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகளை படிப்படியாக இயக்குவது குறித்து சென்னைப் பெருநகர வளர்ச்சி குழும தலைவரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான சேகர்பாபு தலைமையில் ஆலோசனைக் கூட்டம் சிஎம்டிஏ வளாகத்தில் நடைபெற்றது.



இதில், கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்திலிருந்து பேருந்துகள் போக்குவரத்து நெரிசலின்றி செல்ல அயனஞ்சேரி முதல் மீனாட்சிபுரம் வரையிலும், சி.வே.கே.சாலை முதல் ஊரப்பாக்கம் – நல்லம்பாக்கம் வரையிலும், ஆதனூர் முதல் மாடம்பாக்கம் வரையிலும் சாலை அமைக்கும் பணிகள் குறித்தும், முடிச்சூரில் புதிதாக அமையவுள்ள ஆம்னி பேருந்து நிறுத்தம், மழைநீர் வடிகால், திடக்கழிவு மேலாண்மை, பூங்கா பணிகள் குறித்தும், கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் அமையவுள்ள மருத்துவ வசதிகள் மற்றும் காவல் நிலையம் குறித்தும் ஆலோசனை செய்யப்பட்டது. மேலும், கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகளை படிப்படியாக இரண்டு, மூன்று கட்டங்களாக இயக்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

மேலும் கிளாம்பாக்கத்தில் ரயில் நிலையம் அமைக்க வேண்டுமென தமிழக அரசு முன்வைத்த கோரிக்கையை ஏற்று, ரயில்வே நிர்வாகம் அதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங் இதற்கான ஒப்புதலை வழங்கி இருக்கிறார்.

இத்திட்டத்துக்காக தமிழக அரசு ரூ.40 லட்சத்தை ரயில்வே துறைக்கு ஏற்கெனவே வழங்கியுள்ள நிலையில், சர்வே மற்றும் பூர்வாங்க பணிகளை ரயில்வே நிர்வாகம் தொடங்கவுள்ளது. இப்பணிகள் நிறைவடைந்ததும், திட்டத்துக்கான ஒப்பந்தம் விடப்படும். ரூ.20 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள இந்த ரயில் நிலையத்தை ஒரு வருடத்துக்குள் கட்டி முடிக்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளது. வண்டலூருக்கும், ஊரப்பாக்கத்துக்கும் இடையே இந்த ரயில் நிலையம் அமைக்கப்படுகிறது.

# சென்னையில் டிரையம்ப் ஸ்பீடு 400 பைக் அறிமுகம்




சென்னை, ஆக.11

டிரையம்ப் ஸ்பீடு 400 மோட்டார் சைக்கிள்கள் முதன்முறையாக சென்னையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. சென்னையில் உள்ள கிவ்ராஜ் டீலர்ஷிப் அரங்கில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த மோட்டார் சைக்கிள்களை பார்க்க வாடிக்கையாளர்கள் குவிந்தனர். இதன்படி டிரையம்ப் ஸ்பீட் 400 மற்றும் ஸ்க்ராம்லர் 400 எக்ஸ் பைக்குகள் வாடிக்கையாளிடம் சிறந்த வரவேற்பை பெற்றுள்ளன. சென்னையில் நடந்த அறிமுக நிகழ்ச்சியில் பைக்கை முன்பதிவு செய்தவர்கள் மற்றும் டெஸ்ட் டிரைவ் செய்தவர்கள் என ஏராளமான வாடிக்கையாளர்கள் குவிந்தனர்.

மேலும் இந்த மோட்டார் சைக்கிள்களின் சிறந்த திறன், அதிநவீன தொழில்நுட்பம் உள்ளிட்டவை குறித்து வாடிக்கையாளர்கள் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த ப்ரோ பைக்கிங் தலைவர் சுமீத் நரங், இந்த நிகழ்வு இந்திய மோட்டார் சைக்கிள் துறைக்கு முக்கியமான நாளாகும். வாடிக்கையாளர்களுக்கு திருப்தி ஏற்படுத்தும் வகையில் மோட்டார் சைக்கிள்களை வழங்க முடிவு செய்துள்ளோம். ஆர்வம் உள்ள ரைடர்களை வளர்ப்பதற்கும் இது முதல் படியாகும்.

மேலும் புதிய வாடிக்கையாளர்களுக்கு 2 வருட வரம்பற்ற மைலேஜ் வாரண்டி மற்றும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்ட வாரண்டியுடன் 16 ஆயிரம் கிமீ சேவை இடைவெளி கிடைக்கும். பஜாஜ் ஆட்டோ லிமிடெட் நிறுவனத்தின் புதிய சக்கன் ஆலையில் தயாரிக்கும் ஸ்பீடு 400 சென்னையில் உள்ள டிரையம்ப் டீலர்ஷிப்பில் ரூ. 2.33 லட்சம் எக்ஸ்ஷோரூம் விலையில் கிடைக்கும். ஸ்பீடு 400-க்கான முன்பதிவுகள் தொடர்ந்து நடைபெறும். ஆர்வம் உள்ள வாடிக்கையாளர்கள் ஆன்லைனில் முன்பதிவு செய்வதன் மூலம் முன்னுரிமை பட்டியலில் இடம் பெறலாம். மேலும் விவரங்களுக்கு www.triumphmotorcyclesindia.com/booking என்ற இணையதள முகவரியிலும் அருகில் உள்ள டீலர்ஷிப்களையும் அணுகலாம்.

# உள்நாட்டு விமானக் கட்டணம் அதிகரிப்பு

புது தில்லி, ஆக.11

தொடர் விடுமுறை காரணமாக உள்நாட்டு விமானங்களுக்கான கட்டணம் பல மடங்காக உயர்ந்துள்ளதாக செய்திகள் வெளியாகி யுள்ளது. நாடு முழுவதும் சுதந்திர தினம் செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படுகிறது. சனி, ஞாயிறு தொடர் விடுமுறை ஒருபுற மிருக்க செவ்வாய்க்கிழமை சுதந்திரதின விடுமுறை என்பதால் பல நிறுவனங்கள் 4 நாள்கள் தொடர் விடுமுறை அறிவித்துள்ளன. இந்த விடுமுறையையொட்டி ஏராளமானோர் தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்லத் தயாராகி வருகின்றனர். சென்னையிலிருந்து தென்மாவட்டங்கள் மற்றும் திருவனந்தபுரம், கொச்சி, பெங்களூரு, ஹைதராபாத் ஆகிய நகரங்களுக்கு செல்பவர்கள் ஏராளமானோர் விமானத்தில் முன்பதிவு செய்து வருகின்றனர். முன்பதிவு செய்பவர் களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதையடுத்து பயணச்சீட்டுக் கான கட்டணத்தை விமான நிறுவனங்கள் பல மடங்கு உயர்த்தியுள்ளன.

விமான கட்டண விவரம் (ஏறத்தாழ):

இடம் வழக்கமான கட்டணம் உயர்வு கட்டணம்

1. சென்னை-மதுரை ரூ.5,000 ரூ.16,000, 2. சென்னை-திருவனந்தபுரம் ரூ.7,000 ரூ.15,000, 3. சென்னை-பெங்களூரு ரூ.5,000 ரூ.15,000, 4. சென்னை-ஹைதராபாத் ரூ.5,000 ரூ.15,000, 5. சென்னை-தூத்துக்குடி ரூ.4,000 ரூ.12,000

இதன்படி விமான கட்டணம் சராசரியாக 3 மடங்கு வரை உயர்ந்துள்ளது. இதனால், பயணிகள் கடும் சிரமத்தை சந்தித் துள்ளனர். பயணிகளின் வருகைக்கு ஏற்ப கட்டணங்கள் உயர்த்தப் படுவது வழக்கமான ஒன்றுதான் என்றும், பயணச்சீட்டு கட்டணம் உயர்த்தப்பட்டாலும், குறிப்பிட்ட நாள்களில் அனைத்து இருக்கை களும் நிரம்பி விட்டன என்று விமான நிலைய பயணச்சீட்டு முன்பதிவு மையத்தினர் தெரிவித்தனர்.



# கடந்த 8 ஆண்டுகளில் 2.4 லட்சம் கடவுச்சீட்டுகள் ஒப்படைப்பு: மத்திய அரசு

புது தில்லி, ஆக.11

கடந்த 8 ஆண்டுகளில் 2,46,580 இந்தியர்கள் கடவுச்சீட்டுகளை ஒப்படைத்திருப்பது மத்திய அரசின் புள்ளிவிவரத்தின் மூலமாக தெரியவந்துள்ளது. இது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு மாநிலங்களவையில் வெளியுறவுத்துறை இணையமைச்சர் வி.முரளீதரன் அளித்த பதிலில் தெரிவித்துள்ளதாவது: மத்திய அரசின் புள்ளிவிவரங்களின் படி கடந்த 2014 முதல் 2022-ஆம் ஆண்டு வரை 2,46,580 இந்தியர்கள் கடவுச்சீட்டுகளை ஒப்படைத்துள்ளனர். இதில் 60,414 பேருடன் தில்லி முதலிடத்தில் உள்ளது. பஞ்சாப் மாநிலத்தில் 28,117 பேரும், குஜராத்திலிருந்து 22,300 பேரும், கோவாவில் 18,610 பேரும், கேரளத்தில் 16,247 பேரும் கடவுச்சீட்டுகளை ஒப்படைத்துள்ளனர். இதுபோல, கடந்த 2019 முதல் 2022-ஆம் ஆண்டு வரை 35 நாடுகளில் வசிக்கும் 24,000 இந்தியர்கள் அவர்களின் கடவுச்சீட்டுகளை ஒப்படைத் துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கடந்த ஜூலை மாதத்தில் கார்களின் விற்பனை 2.57 சதம் அதிகரிப்பு: சியாம் தகவல்




புது தில்லி, ஆக.11

இந்தியச் சந்தையில் கார்களின் விற்பனை கடந்த ஜூலை மாதத்தில் 2.57 சதம் உயர்ந்துள்ளதாக செய்திகள் வெளியாகி யுள்ளது. இது குறித்து இந்திய வாகனத் தயாரிப்பாளர்கள் சங்கம் (சியாம்) வெளியிட்ட செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

கடந்த ஜூலை மாதத்தில் உள்நாட்டுச் சந்தையில் கார்களின் மொத்த விற்பனை 3,50,149-ஆக உள்ளது. 2022ம் ஆண்டின் இதே மாதத்தோடு ஒப்பிடுகையில் இது 2.57 சதம் அதிகமாகும். அப்போது கார்களின் உள்நாட்டு மொத்த விற்பனை 3,41,370-ஆக இருந்தது.

எனினும், 2022-ஆம் ஆண்டு ஜூலையில் 13,81,303-ஆக இருந்த இரு சக்கர வாகனங்களின் மொத்த உள்நாட்டு விற்பனை கடந்த ஜூலையில் 12,82,054-ஆகக் குறைந்துள்ளது.கடந்த ஆண்டு ஜூலையில் 8,70,028-ஆக இருந்த மோட்டார் சைக்கிள் களின் மொத்த விற்பனை இந்த ஆண்டின் அதே மாதத்தில் 8,17,206-ஆகக் குறைந்துள்ளது. அதே போல், ஸ்கூட்டர்களின் விற்பனையும் 4,28,640-ஆக்க குறைந்துள்ளது. கடந்த ஆண்டின் இதே மாதத்தில் அவற்றின் விற்பனை 4,79,159-ஆக இருந்தது.மதிப்பீட்டு மாதத்தில் 3 சக்கர வாகனங்களின் விற்பனை 56,034-ஆக அதிகரித்துள்ளது. 2022-ஆம் ஆண்டின் ஜூலை மாதத்தில் இந்த எண்ணிக்கை 31,324-ஆக இருந்தது.2022 ஜூலையில் 17,06,545-ஆக இருந்த ஒட்டுமொத்த வாகனங்களின் விற்பனை, கடந்த ஜூலையில் 16,40,727-ஆக (டாடா மோட்டார்ஸ் தவிர்த்து) உள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விரைவில் அறிமுகமாகும் சியோமி பேட் 6 மேக்ஸ்



மும்பை, ஆக.11

சியோமி நிறுவனம் தனது சியோமி பேட் 6 மேக்ஸ் 14 மாடலின் வெளியீட்டு பணிகளில் ஈடுபட்டு வருகிறது. முதற்கட்டமாக இந்த டேப்லெட் மாடல் சீன சந்தையில் அறிமுகம் செய்யப்பட இருக்கிறது. ஆகஸ்ட் 14ம் தேதி நடைபெறும் நிகழ்வில் சியோமி மிக்ஸ் ஃபோல்டு 3 மாடலுடன் புதிய பேட் 6 மேக்ஸ் 14 மாடலும் அறிமுகம் செய்யப்பட இருக்கிறது.

முன்னதாக சியோமி பேட் 6 மாடல் அறிமுகம் செய்யப்பட்ட நிலையில், புதிய மேக்ஸ் மாடல் அறிமுகமாகிறது. பேட் 6 மேக்ஸ் 14 மாடலை சியோமி நிறுவனம் லேப்டாப் மற்றும் சியோமி பேட் 6 மாடல் 11 இன்ச் வேரியன்ட் உடன் ஒப்பிட்டுள்ளது. புதிய பேட் 6 மேக்ஸ் டேப்லெட்-இல் 14 இன்ச் அளவு கொண்ட ஸ்கிரீன் வழங்கப்படுகிறது. இது முந்தைய 11 இன்ச் ஸ்கிரீன் கொண்ட பேட் 6 மாடலை விட 62 சதம் வரை பெரியது ஆகும். டீசரில் புதிய டேப்லெட் பற்றி வேறு எந்த தகவலும் இல்லை.

எனினும், சியோமி பேட் 6 மேக்ஸ் பற்றிய விவரங்கள் கீக்பென்ச் தளத்தில் லீக் ஆகி இருக்கின்றன. அதில் புதிய சியோமி பேட் 6 மேக்ஸ் 14 மாடலில் ஸ்னாப்டிராகன் 8 பிளஸ் ஜென் 1 பிராசஸர் வழங்கப்படும் என்று தெரிகிறது. இத்துடன் 12 ஜிபி ரேம், ஆண்ட்ராய்டு 13 ஒஎஸ், 67 வாட் பாஸ்ட் சார்ஜிங் வசதி வழங்கப்படும் என்று தெரியவந்துள்ளது. தகவல்களுடன் வெளியாகி இருக்கும் புகைப்படங்களில் டூயல் பிரைமரி கேமரா சென்சார்கள், டிஓஎப் சென்சார் உள்ளிட்ட அம்சங்கள் வழங்கப்படும் என்று தெரியவந்துள்ளது. புதிய டேப்லெட் குறித்த இதர விவரங்கள் வரும் நாட்களில் வெளியாகும் என்று எதிர்பார்க்கலாம்.

# மருத்துவ தொழில்நுட்பம் உலகளாவிய உற்பத்தி மையமாக இந்தியா உருவெடுக்கும்: மாண்டவியா




புது தில்லி, ஆக.11

மருத்துவ தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களின் உலகளாவிய உற்பத்தி மையமாக இந்தியா உருவெடுக்கும் என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா நம்பிக்கை தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது: குஜராத் மாநிலம் காந்திநகரில் ஆகஸ்ட் 17 முதல் 19ம் தேதி வரையில் நடைபெற உள்ள இந்தியாவின் முதல் மருத்துவ தொழில்நுட்ப கண்காட்சியான இந்தியா மெட்டெக் எக்ஸ்போ 2023 அறிமுக நிகழ்ச்சியில் அமைச்சர் மாண்டவியா ஆற்றிய உரையாவது: இந்தியாவின் மருத்து உபகரணங்களின் சந்தை மதிப்பு 2050-ஆம் ஆண்டுக்குள் 50 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

நாட்டின் எழுச்சிப் பெற்று வரும் துறைகளில் ஒன்றாக மருத்துவ உபகரணங்கள் துறை கருதப்படுகிறது. மேலும், இந்தியாவை மருத்துவ உபகரணங்களின் உற்பத்தி மையமாக மாற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சமீபத்தில் வெளியிடப்பட்ட தேசிய மருத்துவ உபகரணங்கள் கொள்கை 2023-ஐ திறம்பட செயல்படுத்துவதன் மூலம், மருத்துவ சாதனங்கள் துறையின் வளர்ச்சியை தற்போதைய 11 பில்லியன் டாலரிலிருந்து 2030-க்குள் 50 பில்லியன் டாலராக உயர்த்த முடியும். மேலும், இந்தக் கண்காட்சியில் மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள், மருந்துகள், உபகரணங்கள் மற்றும் வசதிகளில் இந்தியாவின் கண்டுபிடிப்புகள் மற்றும் சாதனைகளை வெளிப்படுத்தும் என்றார்.

# ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றமில்லை ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸ் அறிவிப்பு

மும்பை, ஆக.11

வங்கிகளுக்கான ரெப்போ வட்டி விகிதம் எவ்வித மாற்றமுமின்றி 6.5 சதமாகத் தொடரும் என ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸ் அறிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.



இதனால் வங்கிகளின் குறுகிய கால கடன் வட்டி விகிதங்களில் மாற்றமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது முறையாக ரெப்போ வட்டி விகிதம் மாற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸ் தலைமையில் தில்லியில் நடைபெற்ற நிதிக்கொள்கை கமிட்டி கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சில்லறை பணவீக்கம் அதிகரித்துள்ளது, மேலும் அத்தியாவசியப் பொருள்களின் விலையும் உயர்ந்துள்ளதால் ரெப்போ வட்டி விகிதத்தை மாற்றவில்லை என்று ஆர்பிஐ தெரிவித்துள்ளது. மேலும், நாட்டின் பொருளாதாரம் நிலையான வேகத்தில் வளர்ச்சி கண்டு வருவதாகவும் உலகின் 5 ஆவது மிகப்பெரிய பொருளாதார நாடாக மாறி வருவதாகவும் கூறிய ஆளுநர் சக்திகந்த தாஸ், இந்திய பொருளாதாரம் உலக வளர்ச்சியில் 15% பங்களிப்பதாக தெரிவித்தார்.



# நடப்பாண்டில் ஸ்மார்ட்போன் விற்பனை 6 சதம் சரிவு

புது தில்லி, ஆக.11

இந்தியச் சந்தையில் இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில் ஸ்மார்ட்போன்கள் விற்பனை 6 சதவீதம் சரிவைக் கண்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.இது குறித்து சந்தை ஆய்வு நிறுவன மான சைபர் மீடியா ரிசர்ச் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கடந்த 2022ம் ஆண்டின் ஏப்ரல்-ஜுன் காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் அதே மாதங்களில் இந்தியாவில் ஸ்மார்ட்போன்களின் விற்பனை 6 சதம் சரிந்துள்ளது. எனினும், 5ஜி தொழில்நுட்பம் கொண்ட அறிதிறன் பேசிகளின் விற்பனை, கடந்த ஆண்டின் 2வது காலாண்டோடு ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் அதே மாதங்களில் 45 சதம் வளர்ச்சியடைந்துள்ளது. ரூ.25,000க்கும் அதிக விலை கொண்ட பிரீமியம் வகை அறிதிறன் பேசிகளின் விற்பனையும் மதிப்பீட்டு காலாண்டில் 36 சதம் அதிகரித்துள்ளது. 4ஜி தொழில்நுட்பம் கொண்ட சாதாரண கைப்பேசிகளின் விற்பனை ஏப்ரல்-ஜுன் மாதங்களில் 108 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஆஃப்லைனில் யுபிஐ பேமென்ட் வசதி ஆர்பிஐ விரைவில் அறிமுகம்




மும்பை, ஆக.11

இந்தியாவில் இணைய இணைப்பு மற்றும் டெலிகாம் நெட்வொர்க் உதவியின்றி ஆஃப்லைனில் யுபிஐ பேமென்ட் மேற்கொள்ளும் வசதியை ஆர்பிஐ அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது: நியர் ஃபீல்ட் கம்யூனிகேசன் (என்எப்சி) எனும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆஃப்லைன் பரிவர்த்தனையை மேற்கொள்ள முடியும் என ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸ் தெரிவித்துள்ளார்.

ஆர்பிஐ வங்கி கொள்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. யுபிஐ-லைட் மூலம் இது செயல்பாட்டுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆஃப்லைனில் சிக்கலின்றி யுபிஐ வழியே பணம் அனுப்பலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இந்தியாவில் யுபிஐ-லைட் அறிமுகமானது. குறைந்த தொகையை எளிதில் அனுப்ப உதவுகிறது யுபிஐ-லைட். ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் அதிகபட்சமாக ரூ.200 வரை பயனர்கள் பணம் அனுப்ப முடியும். ஒட்டுமொத்தமாக இதன் டெய்லி லிமிட் ரூ.2,000. போன் பே, பேடிஎம் போன்ற செயலிகள் இந்த வசதியை வழங்குகின்றன.

இதற்கு பயனர்கள் தங்கள் கணக்கில் இருந்து யுபிஐ-லைட்டில் பணம் அனுப்பலாம். அதன் மூலம் பரிவர்த்தனை மேற்கொள்ள லாம். தற்போது யுபிஐ-லைட் பயன்பாடு மாதத்துக்கு ஒரு கோடி பரிவர்த்தனை என உள்ளது. இதை மேலும் பிரபலப்படுத்தும் வகையில் ரிசர்வ் வங்கி இதை முன்னெடுத்துள்ளதாக தெரிகிறது.